**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.3** |
| **Name** | **:** | திரு. ஜெயபாலன் |
| **Father's Name** | **:** | திரு. அர்ஜீனன் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரிகள் 1 முதல் 10 ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.06.2023.**

முதல் விசாரணை -

நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 சுசீலாவை எனக்கு தெரியும். அவருடைய மகன் சுரேஷை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுரேஷ் இறந்தது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். 2017 ஜனவரி மாதம் 2வது வாரத்தில் இரவு 10.00 மணிக்கு ஊரில் சண்டை நடந்தது. சுரேஷிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் ஒரு பொது இடம் சம்மந்தமாக சண்டை நடந்தது. அது சம்மந்தமாக அடிக்கடி சண்டை நடக்கும்.

அது சம்மந்தமாக 2017 ஜனவரி மாதம் 2வது வாரத்தில் சுரேஷ் அடித்துபோட்டு விட்டதாக சொன்னார்கள். நான், சுசீலா, மோகனவேல், உமேஷ் மேலும் நான்கு நபர்கள் சம்பவ நடந்த இடத்திற்கு சென்றோம். சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தபோது சுரேஷ் அடிப்பட்டிருந்தார். 108 ஆம்புலன்ஸ் வந்தது. சுரேஷை ஏற்றி காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவ இடத்தில் சுரேஷை பார்த்தேனா என்றால் பார்த்தேன், உயிர் இருந்தது. அவருக்கு எங்கு அடிப்பட்டிருந்தது என்றால் தலையில் அடிப்பட்டிருந்தது.

மருத்துவமனைக்கு நான் சென்றேனா என்றால் செல்லவில்லை. பொது இடத்தில் தகராறு என்பது எத்தனை நாட்களாக என்றால் நாகப்பன் என்பவர் பொது இடத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக சுரேஷிற்கும் நாகப்பனுக்கும் பிரச்சனை. அந்த பிரச்சனை 3 வருடங்களாக இருந்தது. இதற்கு முன்பு அவர்களுக்குள் சண்டை நடந்ததா என்றால் நடந்தது. சண்டை வரும் போது சுரேஷிற்கு சப்போட்டிற்கு ஆள் இல்லை.

முன்னாடி சுரேஷிற்கும் எதிரி தரப்பில் ஆள்களை குறிப்பிட்டு சொல்ல முடியாது பிரச்சனையில் சுரேஷ் ஏற்கனவே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். சண்டை போட்டதால் தான் மருத்துவமனைக்குச் சென்றார். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

நான் ஊர்மக்கள் மற்றும் சுசீலா ஆகியோர் அடிப்பட்ட இடத்திற்கு செல்வதற்கு முன்பே 108 வாகனம் இருந்தது என்றால் சரி தான். ஒரு நபர் அடிப்பட்டு இருக்கிறார் என்ற தகவல் தெரிந்து தான் 108 வாகனம்

வந்திருந்தது என்றால் சரி தான். எனக்கு தகவல் யார் சொன்னது என்றால் எனக்கு சுசீலா போன் மூலம் தகவல் சொன்னார். சுசீலா தகவல் சொல்லும்போதே அவருடைய மகன் அடிப்பட்டு இருக்கிறார் என்பதை அவருக்கு வழியில் சென்றவர் தகவல் சொல்லி தெரிந்துக்கொண்டதாக என்னிடம் சொன்னார் என்றால் சரி தான்.

என்னுடைய வீடு சுசீலா வீட்டில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் 300 மீட்டர். தகவல் சொன்னபிறகு நாங்கள் சுசீலா மற்றும் சிலர் சிறிது தூர இடைவெளியில் சென்றோம் என்றால் சரி தான். சுசீலா எனக்கு முன்னால் சென்றார்களா என்றால் எங்களுக்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்தார். நான் போய் பார்ப்பதற்கு முன்பே அடிப்பட்ட நபரை 108 வாகனத்தில் ஏற்றிவிட்டார்கள் என்றால் சரி தான்.

முதல் விசாரணையில் சொன்ன தகராறின் போது நான் இல்லை என்றால் சரி தான். எதற்காக நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் இடத்திற்காக தான் நடந்தது. எத்தனை மணிக்கு இறந்துவிட்டார் என்ற தகவல் கிடைத்தது என்றால் மருத்துவமனைக்கு சென்றவுடன் உயிர் போய்விட்டதாக சொன்னார்கள். காலை வரை நான் ஊரில் இருந்தேன் என்றால் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன்.

அரசு மருத்துவமனையில் இருந்தபோது இரவு தூசி காவல்நிலையத்தில் இருந்து போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரி தான். போலிசார் வந்து நடந்த விவரங்களை கேட்டார்கள் என்றால் சரி தான். சுசீலாவும் மற்றவர்களும் சொன்னதை எழுதிக்கொண்டு அவர்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரி தான். சுசீலா இரவு மருத்துவமனைக்கு வந்தவர்

மறுநாள் பிரேத பரிசோதனை முடியும் வரை மருத்துவமனையிலேயே தான் இருந்தார் என்றால் சரி தான். மறுநாள் காலையில் நான் காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன்.

மறுநாள் காலை காவல்நிலையத்திற்கு நான் செல்லும்போதே நாகப்பன், நீலா, தீபா ஆகியோர்களை காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் சரி தான். கைது செய்யவேண்டும் என்று சாலை மறியல் செய்தோம் என்றால் தூசி காவல்நிலையத்தில் முற்றுகையிட்டோம். முற்றுகை நடக்கும்போது வினாயகமூர்த்தி மற்றும் சரவணன் என்ற இரண்டு வழக்கறிஞர்கள் வந்தார்கள் என்றால் சரி தான். மேற்கண்ட இரு வழக்கறிஞர்களும் எங்களுக்கு ஆதரவாக வந்தார்கள் என்றால் சரி தான். அவர்கள் வந்தபிறகு புகார்கள் மாற்றி எழுதப்பட்டது என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.